DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.330/2023

**prosecution witness: LW–14 as PW–10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரிதாபாலு | தொழில்/ பதவி | : | காவல் ஆய்வாளர் அனைத்து மகளிர் காவல் நிலையம் விருதுநகர். |
| த/பெ. | : | பாலு | வயது | : | 46 |
| ஊர் | : | விருதுநகர் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**12.05.2026**

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி விசாரணையை காணொளி வாயிலாக நடத்துவதற்கு அரசுதரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதின் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக விருதுநகர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் காணொளி அறையில் இருந்து ஆஜராகியுள்ளார். திருமதி.நஸ்ரின் பெனாசிர், உதவியாளர் ஆக Remote site ல் உள்ளார். கோர்ட் Site ல் விக்னேஷ் இளநிலை உதவியாளர் மூலமாக சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என்றும் வீடியோ ஆடியோ பதிவுகள் தெளிவாக உள்ளது என்று உறுதி செய்யப்பட்டது.)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது விருதுநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2023ம் தேதி மண்டபம் வட்டக்காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மண்டபம் காவல் நிலைய குற்ற எண் 90/2023 சட்டப்பிரிவுகள் 279, 304 A இதச வழக்கில் புலன் விசாரணை அதிகாரி ஜீவரெத்தினம் பணிமாறுதல் சென்றபிறகு நான் இந்த வழக்கை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கு கோப்பை பார்வையிட்டேன். **புகார் மனு அ.சா.ஆ.7 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரையும் முந்தைய காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தபடியால் அதை தொடர்ந்து இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான சங்குமாரி, 43 வயது த/பெ போஸ் என்பவரை பார்த்திபனூர் சென்று

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துமவனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன சந்திரசேகரன் என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.மணிகண்டன் அவர்களிடமிருந்து **பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று பார்வையிட்டேன். பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து இராமநாதபுரம் மோட்டார் வாகன அலுவலகம் வந்து இவ்வாகன விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களுக்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்று பார்வையிட்டு அதனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **இரண்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து அன்றைய தினமே எதிரி ஆரோக்கிய பிரசாத் மீது பிரிவு 279, 304A இதசவின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிதரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.05.12 10:22:53 +0530